| Headline | New House For Saraswathy | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 16 Aug 2016 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 9 |
| ArticleSize | 274 cm² | Journalist | NULL |
| PR Value | RM 2,391 | | |
| | | | |



# புதிய வீட்டில் தீபாவளி! சரஸ்வதி மகிழ்ச்சி

(பார்த்திபன் நாகராஜன் / தி.க. காளிதாசன்)

கோலாலம்பூர், ஆக. 16-

டிஎன்பி உதவியால் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ள புதிய வீட்டில் தீபாவளியை கொண்டாடுவேன் என்று சரஸ்வதி த/பெ சுப்பையா நேற்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

என் தம்பியுடன் 20 ஆண்டுகளுக்கும் மேலாக கம்போங் பாண்டானில் உள்ள இந்த வீட்டில் வாழ்ந்து வருகிறேன். தற்போது எனக்கு 54 வயதாகிறது. கறையான் அரிப்பால் வீடு மிகவும் மோசமான நிலையில் இருந்தது. குறிப்பாக இந்த வீட்டில் கழிப்பறை இல்லை.

கழிப்பறைக்குச் செல்ல வேண்டுமானால் வேறு இடத்திற்கு தான் நாங்கள் செல்ல வேண்டிய சூழ்நிலை. இதை தவிர்த்து கூரை பிரச்சினையால் மழை பெய்தால் வீட்டில் தண்ணீர் ஊற்றும்.

இப்படி பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நாங்கள் இருவரும் இந்த வீட்டில் வாழ்ந்து வந்தோம். இவ்வேளையில் தான் கம்போங் பாண்டான் மஇகா தலைவர் ஸ்ரீதரன், தித்திவங்சா மஇகா தலைவர் ஆர்.கே. சுந்தரம் ஆகியோரின் முயற்சியில் டிஎன்பி எனப்படும் தெனாகா நேஷனல் நிறுவனத்தினர் எங்களுக்கு உதவ முன்வந்தனர். டிஎன்பியின் உதவியால் இன்று எங்கள் வீடு முழுமையாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இன்று நாங்கள் மகிழ்ச்சியுடன் உள்ளோம் என்று சரஸ்வதி கூறினார். இதனிடையே சமூக நல கடப்பாட்டின் கீழ் டிஎன்பி பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மிகவும் மோசமான நிலையில் இருந்த 72 வீடுகளை இதுவரை டிஎன்பி மறுசீரமைப்பு செய்து உள்ளது.



இதன் மூலம் 72 குடும்பங்கள் இன்று மகிழ்ச்சியுடன் அவ்வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர் என்று டிஎன்பியின் தலைமை நிர்வாகி ஐஆர் அஹ்மாட் பரோடி கூறினார். சரஸ்வதி வசித்த வீட்டை ஆரம்பத்தில் நாங்கள் பார்த்த போது மிகவும் மோசமான நிலையில் இருந்தது. கறையான் அரிப்பால் வீடு இடிந்து விழும் நிலையில் இருந்தது.

உடனே டிஎன்பி நிறுவனம் 30 ஆயிரம் வெள்ளி செலவில் அவ்வீட்டை மறுசீரமைப்பு செய்தது. தற்போது அவ்வீடு மீண்டும் சரஸ்வதிக்கே வழங்கப்பட்டிருக்கிறது என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

Powered by: iSENTIA